தினகரன் (04.04.2025)

காகித ஆலை சார்பில்

# ரூ. 4.11 லட்சத்தில் அரசு பள்ளிக்கு கழிப்பறை கட்டிடம்



▶ அரசு பள்ளிக்கு ரூ.4.11 லட்சத்தில் கழிப்பறை கட்டிடத்தை காகித நிறுவன பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச் செல்வன். பொது மேலாளர் (மின்னியல் & கருவியியல்) ராஜலிங்கம் ஆகியோர் திறந்துவைத்தனர்.

வேலாயுதம்பாளையம், ஏப். 4: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் ரூ.4.11 இலட்சம் செலவில் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு கழிப்பறை கட்டிடம் கட்டித்தரப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் மூலம் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்காக அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக பொத்தனூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவியர்களின் பயன்பாட்டிற்காக ரூ.4.11 இலட்சம் செலவில் பள்ளிக் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு மாணவிகளின் பயன்பாட்டுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழிப்பறை கட்டிடம் பணிகள் முடிக்கப்பட்டு மாணவியர்களின் பயன்பாட்டிற்காக நேற்று ஒப்படைக்கப்பட்டது. பொத்தனூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச் செல்வன் கலைச்செல்வன். பொது மேலாளர் (மின்னியல் - கருவியியல்) ஆர். ராஜலிங்கம் ஆகியோர் பள்ளிக் கழிப்பறை கட்டிடத்தை திறந்து பயன்பாட்டிற்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் பேருராட்சித் தலைவர் கருணாநிதி. பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள். பெற்றோர் ஆசிரியக்கழகத் தலைவர் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

C M Y K